[22nd October 1964

இறக்குமதி செய்யப்படும்போது, அதோடு சேர்ந்து இந்த வியாதிகளும் இறக்குமதி செய்யப்படுகிற காரணத்தினுல் வருகிறதா? அதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: ஸ்ப்ரேயர்ஸ், டஸ்டர்ஸ், பவர் ஸ்ப்ரேயர்ஸ் எல்லாவற்றையும் வரவழைத்து அதிகப்படியாகக் கொடுத்து, பூச்சிகள் வருவதைத் தடுக்க . . . பூச்சிகள் இறக்குமதி செய்யப்படுவதில்லை. என்ன காரணம் என்று தெரியாமலேயே சில சமயங்களில் எதோ மாதிரி வியாதி வந்து விடுகின்றது. அதைத் தடுக்க அரசாங்கம் பிரயத்தனம் செய்து வருகிறது.

கொலை வழக்குகள்

* 61 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1963-ல் எத்தனை கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(இ) அவைகளில் (1) எத்தனை துப்பு விசாரிக்கப்பட்டு வழக்குகள் போடப்பட்டன. (2) எத்தனை துப்பு துலக்காமல் விடப்பட்டன?

THE HON. SRI P. KAKKAN: (a) 64.

(b) (i) 48.

(ii) 13.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, மொத்தம் ஏற்பட்ட கொலை வழக்குகளில் 13 கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டது என்று அமைச்சர் கூறுகிறார்கள். கண்டு பிடிக்க முடியாமல் போனது போலீஸாரின் திறமைக் குறைவு காரணமா? அல்லது வேறு குறுக்கீடு காரணமாகக் கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டதா?

கனம் திரு. பூ. கக்கன்: எவிடென்ஸ் சரியாக இல்லாததால் சில கேஸ்கள் கண்டுபிடிக்க முடியாமல் போகின்றன.

கனம் சபாநாயகர்: குறுக்கீடு என்பது தெளிவாக இல்லை.

பால்பண்ணைத்துறையில் பயிற்சி

* 62 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால்பண்ணையிலிருந்து டென்மார்க்குக்கு எத்தனை பேர் பயிற்சி பெற அனுப்பிவைக்கப்பட்டனர்?

(இ) இதற்கான மொத்தச் செலவு எவ்வளவு?

22nd October 1964]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) சென்னை, பால் பண்ணைத் திட்டத்திலிருந்து இரண்டு பேர் டென்மார்க்கிலுள்ள பால் பண்ணைத்துறையில் மேல் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். 1962-ம் ஆண்டில் மத்திய பால் பண்ணை நிர்வாகி திரு. சி. ஆர். சீதாராமனும், 1963-ம் ஆண்டில் பால் பண்ணை மேற்பார்வையாளர் திரு. ஆர். பாலகிருஷ்ணனும் இப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள்.

(இ) டென்மார்க்கில் அவர்களுடைய பயிற்சி சம்பந்தமாக மாநில அரசாங்கம் சுமார் 4,000 ரூபாய் (நாலாயிரம் மட்டும்) செலவழித்தது.

திரு. து. ப. அழகமுத்து : இப்படி பயிற்சிக்குச் சென்று வந்த ஒரு உயர்தர அதிகாரி பயிற்சி முடிந்து வந்ததும் பால் பண்ணையில் தொடர்ந்து வேலையில் இல்லாமல் போய் விட்டார் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானல் பயிற்சிக்காகச் செலவு செய்யப்பட்ட பணம் என்ன ஆவது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : பயிற்சி பெற்றவர்களில் இன்னொருவர் இனிமேல்தான் வரவேண்டும். அவர் நவம்பர் கடைசியில் வரவேண்டும். வந்துள்ள ஒருவர் இப்போது பால் பண்ணையில் இருந்து கொண்டிருக்கிறார்.

திரு. எஸ். ஜே. சாமசாமி : பயிற்சி பெற இரண்டு பேர்கள்தான் அனுப்பப்பட்டதாகக் கூறினார்கள் எத்தனை பேர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள் என்று அறியலாமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நமக்கு இரண்டு பேர்கள் வேண்டியிருந்தது. அப்போது இரண்டு பேர்களை அனுப்பினோம். எத்தனை அப்ளிகேஷன் என்ற தகவல் இப்போது இல்லை. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Zamin forests

* 63 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Panchayats of Mittadhainahally, Mittareddihally, etc., in Dharmapuri taluk for the entrustment of a portion of Noolahally Reddihally Mitta forests and for transfer of the same as unassessed waste; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) It is under consideration of the Government.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இது போன்று பல இடங்களில் ஜமீன் பிராந்தியங்களில் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களைக் கூடக் காடுகள் என்று பிரித்திருக்கிறார்கள். அதனால்